வெளியீடு எண் 75.

திருவேட்களத் திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 75

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருவேட்களத் திருப்பதிகங்கள்

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஆக்ஞைப்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

முன்னுரை

கோயில் என்னும் பொதுப் பெயரைத் தனக்கே சிறப்புப் பெயராகக் கொண்ட சிதம்பரத்திற்குக் கீழ்பால் விளங்குவது திருவேட்களமென்னும் தலமாகும். இதற்கு மூங்கில்வனம் என்னும் பெயரும் உண்டு. சீகாழிப் பெருமானாகிய திருஞானசம்பந்த சுவாமிகள் சீலத்தார் தொழுதேத்து சிற்றம் பலப் பெருமானை நாடோறும் தரிசித்தற்குத் தங்குமிடமாகக்கொண்டு எழுந்தருளியிருந்த சிறப்பினையுடையது இத்தலம். இறைவன் திருநாமம் **பாசுபதேசுவரர்.** அம்மையார் திரு நாமம் **நல்லநாயகி.** அருச்சுனன் தவங்கிடந்து பாசுபதாஸ்திரம் பெற்ற தலமும் இதுவே யாம். இதனை, திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலில் "**வேடனு ருறை வேட்களம்** சேர்மினே" என்ற இறுதிப் பகுதியும் அறிவிக்கின்றது. மேலும்

பாசுபதாஸ்திரம் ஏந்திய உற்சவ விக்கிரகமும், அருச்சுனனுடைய உற்சவ விக்கிரகமும் இவ்வாலயத்திலுள்ளன.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றும் ஆக இருபதிகங்கள் உள்ளன.

முதற்பதிகம் பெருமானின் பரத்துவத்தையும்; அவன் திருமுடி திருக்கை, திருமார்பு, திருவரை ஆகிய இடங்களில் இன்னின்னவை தரித்திருக்கின்முன் என்பதையும்; காமனைக் காய்ந்தது, முப்புரமெரித்தது, காலனைக் கடிந்தது, நஞ்சுண்டது, அயனும் மாலும் கைதொழ நின்றது, யானைத்தோல் போர்த்தது, இராவணன் தோள்கள் அழுந்த விறல் ஊன்றியது முதலிய வரலாற்றுக் குறிப்புக்களையும் அறிவிக்கின்றது.

இரண்டாவது பதிகம் "மக்களே! வீணே கஷ்டப்பட்டுக் கவலைக்கு உள்ளாகாதீர்கள். உடலினின்றும் உயிர்பிரிந்து செல்லல் திண்ணம். உயிருள்ளபோதே திருவேட்களம் செல்லுங்கள்; பெருமானை வணங்குங்கள்; அவன் பொன்னடிகளைப் பூக்கள் கொண்டு போற்றுங்கள்; காத்து அருள் செய்வன். சூழ்ந்தவரது குட்டநோய் நீங்கும்; நாடொறும் நம்வினைபோயறும்; துன்பமில்லை, துயரில்லை; அல்லலில்லை, அருவினையில்லை; என்றும் இன்பத்தோடு இருக்கலாம், என்னும் உறுதியினை அறிவிக்கின்றது.

இத்தகைய சிறந்த பதிகங்களைச் சைவ நன்மக்கள் யாவரும் நாடோறும் பாராயணம் செய்து பெருமானருளைப் பெற வேண்டும்; பாராயணத்திற்கு ஏற்ப அந்தந்தத் தலப்பதிகங்களைத் தனித்தனியே சிறு சிறு நூலாக அச்சிடவேண்டும்; அச்சிட்ட அந்நூல்களை, அவ்வவ்வத் தலங்களிலே

எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனை செய்வித்து ஆராதனைகாலத்தில் திருமுறை வல்லார்களைக்கொண்டு முறைப்படி ஓதுவித்துப் பின்னர் அன்பர்கட்கு வழங்கவேண்டும்; அப்பொழுதுதான் திருமுறை ஓதும் முறையினை மக்கள் அறியக்கூடும் என்று திருவுள்ளங் கொண்டார்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். அவர்கள் திருவுள்ளப் பாங்கின்படி. இந்நூல் வெளிவந்துள்ளது. மக்கள் பாராயணஞ் செய்து பாசுபதேசுவரர் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று வாழ்வார்களாக.

உ

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அந்தமுமாதியு மாகியவண்ண
லாரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப
மலைமகள் காண நின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை
தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும்
வேட்கள நன்னகராரே. 1

சடைதனைத்தாழ்தலு மேறமுடித்துச்
சங்கவெண்டோடு சரிந்திலங்கப்
புடைதனிற் பாரிடஞ்சூழப்
போதருமா றிவர்போல்வார்
உடைதனிறைவ்விரற் கோவணவாடை
யுண்பதுமூரிடு பிச்சைவெள்ளை
விடைதனை யூர்திநயந்தார்
வேட்கள நன்னகராரே. 2

௨

பூதமும்பல்கண மும்புடைசூழப்
பூமியும்விண்ணு முடன்பொருந்தச்
சீதமும்வெம்மையு மாகிச்
சீரொடுநின்றவெஞ் செல்வர்
ஓதமுங்கானலுஞ் சூழ்தருவேலை
யுள்ளங்கலந்திசை யாலெழுந்த
வேதமும்வேள்வியு மோவா
வேட்கள நன்னகராரே. 3

அரைபுல்குமைந்தலை யாடலரவ
மமையவெண் கோவணத் தோடசைத்து
வரைபுல்குமார்பி லொராமை
வாங்கியணிந் தவர்தாந்
திரைபுல்குதெண்கட றண்கழியோதந்
தேனலங்கானலில் வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்னகராரே. 4

௫

பண்ணுறுவண்டறை கொன்றையலங்கல்
பால்புரைநீறுவெண் ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர் பேணார்
மும்மதிலெய்த பெருமான்
கண்ணுறுநெற்றி கலந்தவெண்டிங்கட்
கண்ணியர்விண்ணவர் கைதொழுதேத்தும்
வெண்ணிறமால்விடை யண்ணல்
வேட்கள நன்னகராரே. 5

கறிவளர்குன்ற மெடுத்தவன்காதற்
கண்கவரைங்கணை யோனுடலம்
பொறிவளராரழலுண்ணப்
பொங்கிய பூதபுராணர்
மறிவளரங்கையர் மங்கையொர்பங்கர்
மைஞ்ஞிறமானுரி தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந் தாரார்
வேட்களநன்னகராரே. 6

மண்பொடிக்கொண்டெரித் தோர்சுடலை
மாமலைவேந்தன் மகண்மகிழ
நுண்பொடிச்சேர நின்றாடி
நொய்யன செய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலை யோடுகையேந்திக்
காலனைக்காலாற் கடிந்துகந்தார்
வெண்பொடிச் சேர்திருமார்பர்
வேட்களநன்னகராரே. 7

ஆழ்தருமால்கட னஞ்சினையுண் டா
ரமுதமமரர்க் கருளிச்
சூழ்தருபாம்பரை யார்த்துச்
சூலமோடொண் மழுவேந்தித்
தாழ்தருபுன்சடை யொன் றினைவாங்கித்
தண்மதியம்மய லேததும்ப
வீழ்தருகங்கை கரந்தார்
வேட்கள நன்னகராரே. 8

௭

திருவொளிகாணிய பேதுறுகின்ற
திசைமுகனுந் திசைமேலளந்த
கருவரையேந்திய மாலுங்
கைதொழ நின்றதுமல்லால்
அருவரையொல்க வெடுத்தவரக்க
ஞடெழிற்றோள்க ளாழத்தழுந்த
வெருவுறவூன்றிய பெம்மான்
வேட்கள நன்னகராரே. 9

அத்தமண்டோய்துவ ராரமண்குண்டர்
யாதுமல்லாவுரை யேயுரைத்துப்
பொய்த்தவம் பேசுவதல்லாற்
புறனுரையாதொன்றுங் கொள்ளேன்
முத்தனவெண்முறு வல்லுமையஞ்ச
மூரிவல்லானையி னீருரிபோர்த்த
வித்தகர்வேத முதல்வர்
வேட்கள நன்னகராரே. 10

விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி
வெண்கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணியசீர்வளர் காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொரு பாகமமர்ந்து
பேணியவேட்கள மேன்மொழிந்த
பண்ணியல்பாடல் வல்லார்கள்
பழியொடு பாவமிலாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 1

கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புரஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே. 2

வேட்க ளத்துறை வேதிய னெம்மிறை
ஆக்க ளேறுவ ரானஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினாற்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே. 3

அல்ல லில்லை யருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடு மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே. 4

துன்ப மில்லைத் துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தியிருப்பதே. 5

கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னநீர்
சிட்ட னார்திரு வேட்களங் கைதொழப்
பட்ட வல்வினை யாயின பாறுமே. 6

வட்ட மென்முலை யாளுமை பங்கனார்
எட்டு மொன்று மிரண்டுமூன் றாயினார்
சிட்டர் சேர்திரு வேட்களங் கைதொழு
திட்ட மாகி யிருமட நெஞ்சமே. 7

நட்ட மாடிய நம்பனை நாடொறும்
இட்டத் தாலினி தாக நினைமினோ
வட்ட வார்முலை யாளுமை பங்கனார்
சிட்ட னார்திரு வேட்களந் தன்னையே. 8

வட்ட மாமதின் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கைய ராயினுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே. 9

சேட னுறை யுஞ்செழு மாமலை
ஓடி யாங்கெடுத் தான்முடி பத்திற
வாட வூன்றி மலரடி வாங்கிய
வேட னுறை வேட்களஞ் சேர்மினே. 10

திருச்சிற்றம்பலம்